செய்தி வெளியீடு எண். 50-2018 நாள்: 26.03.2018

# விழுப்புரம் மாவட்டத்தில், மின் ஆளுமை திட்டத்தின் மூலம் கூடுதலாக 15 வகையான வருவாய்த்துறை சான்றிதழ்கள் ஆன்லைன் மூலம் வழங்கும் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

******

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில், மின் ஆளுமை திட்டத்தின் மூலம் கூடுதலாக 15 வகையான வருவாய்த்துறை சான்றிதழ்கள் ஆன்லைன் மூலம் வழங்கும் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு சான்றிதழ்களை இன்று (26.03.2018) வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் அரசின் சேவைகள் விரைவாக பொதுமக்களுக்கு தங்கள் இடத்திலேயே கிடைக்கப்பெறவும், பொதுமக்களின் சிரமத்தை குறைத்திடவும் மின் ஆளுமைத் திட்டம் (e-District Project) விழுப்புரம் மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டுவருகின்றது.

மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் வருவாய்த் துறையின் மூலம் வழங்கப்படும் வருமானச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண் சான்றிதழ், சமூகநலத் துறையின் மூலம் வழங்கப்படும் திருமணநிதி உதவித் திட்டம் மற்றும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், இணையவழி பட்டாமாறுதல்கள் உள்ளிட்ட சேவைகள் விழுப்புரம் மாவட்டம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ள 535 பொது இ-சேவை மையங்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், மின் ஆளுமைத் திட்டத்தினை விரிவாக்கம் செய்யும் பொருட்டு தமிழக அரசின் ஆணைப்படி நேரடியாக வட்டாட்சியர் அலுவலகம் மூலம் வழங்கப்பட்டுவந்த கீழ்க்குறிப்பிட்டுள்ள 15 வருவாய்த்துறை சான்றிதழ்களை கூடுதலாக மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் செயல்படும் 535 இ-சேவை மையங்கள் மூலமாக பொது மக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

வாரிசு சான்றிதழ் (Legal heir Certificate), சிறு/குறு விவசாயி சான்றிதழ் (Small / Marginal Farmer Certificate), இதர பிற்படுத்தப்பட்டோர சான்றிதழ் (Other backward Class Certificate), சொத்து மதிப்பு சான்றிதழ் (Solvency Certificate), அடகு வணிகர் உரிமம் சான்றிதழ் (License under Pawn Broker Act), கடன் கொடுப்போர் உரிமம் சான்றிதழ் (Money Lender’s License), இயற்கை இடர்பாடுகளால் இழந்த பள்ளி/ கல்லூரி நகல் பெற சான்றிதழ் (Certificate of Loss of School Records), ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ் (No male Child Certificate), விதவைச் சான்றிதழ் (Widow

Certificate), திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ் (Unmarried Certificate), வசிப்பிட சான்றிதழ் (Residence Certificate), கலப்பு திருமண சான்றிதழ் (Inter –caste marriage Certificate), குடிபெயர்ப்பு சான்றிதழ் (Family migration Certificate), வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ் (Unemployment Certificate), விவசாய வருமான சான்றிதழ்(Agricultural Income Certificate) ஆகிய சேவைகளினை பெறுவதற்கு மனு ஒன்றிற்கு ரூ.60/- மட்டும் சேவைக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் தங்கள் அருகிலுள்ள அரசு பொது இ-சேவை மையங்களில் தகுந்த ஆவணங்கள் மற்றும் பயனாளியின் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை கொண்டு தேவையான சான்றிதழ்களை விண்ணப்பம் செய்து பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கார்த்திகேயன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சரஸ்வதி, விழுப்புரம் வட்டாட்சியர் திரு.சுந்தரராஜன், தனிவட்டாட்சியர் (ச.பா.தி.) திருமதி.ரஞ்சனி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.